# பத்தாம் வகுப்பு

# இயல் 1

# அன்னை மொழியே

## ஆசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பெயர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இயற்பெயர் : துரைமாணிக்கம்


பெற்றோர் : துரைசாமி – குஞ்சம்மாள்

ஊர் : சேலம் மாவட்டம் சமுத்திரம்

காலம் : 10.3.1933 – 11.6.1995


பணி : இதழாசிரியர் (தென்மொழி, தமிழ்சிட்டு)

நூல்கள் : உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், **கனிச்சாறு**, எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி, பள்ளிப்பறவைகள், திருக்குறள் மெய்பொருளுரை.



# அழகார்ந்த செந்தமிழே

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!







தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! *






திருக்குறள்


பத்துப்பாட்டு
1. திருமுருகாற்றுப்படை
2. குறிஞ்சிப் பாட்டு
3. மலைபடுகடாம்
4. மதுரைக் காஞ்சி
5. முல்லைப் பாட்டு
6. நெடுநல்வாடை
7. பட்டினப் பாலை
8. பெரும்பாணாற்றுப்படை
9. பொருநர் ஆற்றுப்படை
10. சிறுபாணாற்றுப்படை


எட்டுத்தொகை
நூல்கள் 1.நற்றிணை
2.குறுந்தொகை
3.ஐங்குறுநூறு
4.பதிற்றுப்பத்து
5.பரிபாடல்
6.கலித்தொகை
7.அகநானூறு
8.புறநானூறு


சீவகசிந்தாமணி
மணிமேகலை
வளையாபதி
சிலப்பதிகாரம்
குண்டலகேசி



பதினெண்
கீழ்க்கணக்கு
நூல்கள்


செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை

எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?

முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்


விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்







உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!



# பாடல் பொருள்

- அன்னை மொழியே; அழகான செந்தமிழே;
- பழமைக்கும் பழமையானவளே;
- கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகத்தின் பேரரசியே;
- பாண்டிய மன்னனின் மகளே;
- திருக்குறளின் பெரும் பெருமைக்குறியவளே;
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியச் சிறப்பு மிக்கவளே;
- உன் பெருமைகளை எண்ணி வாழ்த்துகிறோமே!

- செந்தமிழே;
- சொல்லுவதற்கு அரிய நின் பெருமைகளை என் நாக்கு எவ்வாறு விரித்து உரைக்கும்;
- பழம்பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும் கொண்ட தமிழே;
- வியக்கத்தக்க உன் நீண்ட நிலைத்தன்மையும், வேற்று மொழியாரின் புகழுரைகளும் உன் மேல் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன;
- செந்தாமரையின் தேனைக் குடித்த வண்டானது சிறகசைத்துப் பாடுவது போல, செந்தமிழே உன்னைச் சுவைத்து உன் சிறப்பினை எங்கும் பாடி மகிழ்கின்றோம்.

# வினாக்கள், செயல்பாடுகள்

1.பெருஞ்சித்திரனார் குறிப்பு எழுதுக.

2.தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பவலரேறு சுட்டுவன யாவை?

3.தமிழின் பெருமைகளை எவ்வாறு பாடி மகிழ்வோம்?

- எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற நூல்களின் பெயர்கள், நூலாசிரியர்களின் பெயர்களை எழுதி வரல்.
- தமிழ்த்தாய் வாழ்த்தின் பொருள் அறிந்து, எழுதி, மனனம் செய்தல்.
- தமிழின் பெருமைகள் குறித்து 3 நிமிடங்கள் பேசுதல்.